[18th February 1959

Housing Scheme for Valavanur Police Constables

475 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வளவனூர் போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் ஏற்பாடாகியிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் எப்பொழுது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No Sir

(*b*) Does not arise.

SRI A. GOVINDASAMY : வளவனூரில் உள்ள ஸப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்கள் இவர்களெல்லாம் வீடு இல்லாத நெருக்கடியால் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்து, அந்தத் திட்டத்தை வருகின்ற பட்ஜெட்டிலாவது சேர்ப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்பொழுது யோசனையில் இல்லை என்று சொன்னேனே தவிர, நிதி நிலைமைக்கு ஏற்றவாறு இதெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

Khadi

* 476 *Q.*—SRI P. G. MANICKAM : உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ம் வருஷத்திலே சென்னை அரசாங்க காதி (Khadi) இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலே 1958-ம் வருஷக் கடைசி வரைக்கும் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Budget Estimate for 1958-59 was Rs. 253·13 lakhs which was revised to Rs. 138·03 lakhs in the revised estimates for 1958-59. The expenditure incurred up to the end of December 1958 was Rs. 84,89,416.

(*b*) The value of Khadi sold during 1958-59 (up to December 1958) was Rs. 49,57,920·80.

SRI P. G. MANICKAM : இந்த நூற்பு வேலை செய்வதற்கான வாய்ப்புகள் எத்தனை தொழிலாளிகளுக்கு இதன் மூலம் கிடைத்தன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தனியாக கேள்வி கேட்டால், விவரம் சொல்லலாம்.

Harijan converts

* 477 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the significance of the statement that "Harijan Converts will be treated as Backward Classes for the purposes of Scholarships for Law Course" in Notification II issued by the Director of Harijan Welfare in the *Fort St. George Gazette, dated* 11*th June* 1958?

THE HON. SRI P. KAKKAN : Prior to 1951 Scheduled Caste converts were not given scholarships from the Harijan Welfare Department for Law Course. They are given scholarships from

the Harijan Welfare Department for this course only from the year 1951–52. As the Scheduled Caste converts were then treated as Backward Classes for purposes of admission in the colleges they were classified as Backward Classes for purposes of granting scholarships from the Harijan Welfare Department for Law Course.

SRI S. LAZAR : ஏனைய சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் கூட, கல்வித் துறையிலாவது அதே சலுகைகள் கொடுக்க சர்க்கார் திட்டத்தை வகுத்திருக்கிறபொழுது, அதுவும் சட்டக் கல்லூரியில் படிக்கக்கூடிய ஹரிஜன கிறிஸ்துவ மாணவர்களுக்கு மறுக்கப்பட்டது என் ?

THE HON. SRI P. KAKKAN : கல்வித் துறை என்றால், காலேஜில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்றது கிடையாது. மற்றபடி கல்வித் துறையில் என்னென்ன உதவி கொடுக்கவேண்டுமோ, அதையெல்லாம் அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வருகிறது.

SRI P. G. MANICKAM : ஷெட்யூல்டு வகுப்பினர் ஜாபிதாவில் எந்தெந்த இதர வகுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ? அல்லது சேர்க்கப்படுவதற்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் ஹரிஜன அருந்ததியர்கள், காந்திஜியின் மனத் திருப்திக்கு உகந்த வகையில் அவர்களுக்காக ஒரு தனி இலாகா ஏற்படுத்தி அந்த வேலையை செய்துகொண்டிருக்கிறோம். தாழ்ந்த தன்மையுள்ள வேறு மதத்தைச் சேர்ந்தவர்களையும் இதில் சேர்த்துகொண்டு ஹரிஜன மக்களுக்கு எப்படி வேலை செய்ய முடியும் ? ஆகவே, சர்க்கார் அதற்குத் தகுந்த முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை செய்யவேண்டும். மற்ற இனங்களுக்கு அவர்களுக்குத் தகுந்த முறையில் வேலை செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : முதலில் இந்த இலாகாவானது ஏற்பட்டது கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியபடிதான். ஹரிஜனங்களை முதலில் கவனிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இது முதலில் ஏற்பட்டது. இதர சமூகத்தினருடைய நன்மையையும் கவனிக்க வேண்டுமென்ற கருத்தில், ஹரிஜன கிருஸ்துவர்களும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுடைய நிலைமையையும் கவனிக்கவேண்டுமென்று பின்னால் அரசாங்கம் அதற்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறது.

Liquor permits

* 478 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. Minister for Home be pleased to state the number of liquor permits issued in the Madras City in the years 1956-57 and 1957-58 to Indian women?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the number of fresh liquor permits issued to Indian women in the Madras City during 1956-57 and 1957-58 is two and five respectively. The number of liquor permits renewed during the aforesaid year is eleven and ten respectively.

SRI A. A. RASHEED : Were the permits issued to women on doctors' recommendation or on their application stating that they were addicts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All permits are issued on medical grounds.